Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஆவணி மீ 01 ஆம் உ வெள்ளிக்கிழமை (17 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 25 ஓசை 180

## கதிர்காமக் கந்தனின் "ஓம்" ஐக் காணவில்லை

(கதிர்காமம்)

கதிர்காமம் முருகன் ஆலய முகப்பில் இருந்த "ஓம்" என்றஎழுத்து திடீரென்று மாயமாய்மறைந்து விட்டது. ஓம் எழுத்து பொருத்தியிருந்த இடத்தில் இப்போது வேல்சின்னம் மாத்திரமே காணப்படுகிறது.

இராமகிருஷ்ண யாத்திரிகர் விடுதிமுகப்பில் இருந்த "ஓம்முருகா" என்ற எழுத்துக்களும் நீக்கப்பட்டு வள்ளியம்மன் தேவா (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்நகரில் கால நேரமற்ற விமானப் படைத் தாக்குதல்!

## பலவந்தமாகவும் அகதி முகாம் அமைக்கப்படுமாம்

(கொழும்பு)

வவுனியாவிலும் மன்னாரிலும் அகதிகள் முகாம் அமைக்க அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேவையேற்பட்டால் பலாத்காரமாக இந்த முகாம்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

தமிழ் அகதிகள் இந்தியா செல்வதைத் தடுக்க முதலில் மன்னாரில் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புடன் அகதிமுகாம் அமைக்கப்படுமென அமைச்சர் ரஞ்சன் முன்பு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேற்று நண்பகலிலும் பிற்பகலிலும் குண்டுவீச்சுக்குமூவர் பலி பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரப்பகுதியிலும் நல்லூர் பகுதியிலும் நேற்று நண்பகலிலும் பிற்பகலிலும் ஸ்ரீலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவை மேற்கொண்ட தாக்குதலினால் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் ஒருவர் அதிர்ச்சி காரணமாக மாரடைப்பால் மரணமானார். ஏழு பொதுமக்கள் காயமடைந்தனர். யாழ். மாநகரசபைக் கட்டிடம் உட்பட பத்திற்கு மேற்பட்ட வீடுகள், மூன்று கடைகள் என்பனவும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 10 30 மணியளவில் புதுவிதமான ஹெலிஹொப்டர் ஒன்று யாழ். நகரப் பகுதிகளிலும், நல்லூர்ப் பகுதிகளிலும் பல தடவைகள் ஆகாயத்தில் வட்டமிட்டு பறந்து வேவுபார்த்துச் சென்றது.

இதனையடுத்து பகல் 11.30 மணியளவில் வந்த இரண்டு பொம்பர் குண்டு வீச்சு விமானங்கள் நல்லூர்ப்பகுதிகளில் மாறிமாறி ரொக்கெற்குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கொல்லப்படுவதை ரஞ்சன் ஒத்துக்கொள்கிறார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கிய குழுவொன்றினால் கொல்லப்பட்டு வருவதாக தேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா ஒப்புக்கொண்டுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற வாராந்த நிரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை முற்றாக சேதம்; வாகனங்களும் நாசமாகின

(நல்லூர்)

மாநகரசபை அலுவலகத்தை நேற்றுக்காலை குண்டு வீச்சு விமானங்கள் தாக்கி முற்றாக சேதப்படுத்தி விட்டன. மாநகரசபைஆணையாளரின் அலுவலகம் உட்பட பல பிரிவு கட்டிடங்களும் வாகனங்களும் இந்த குண்டு வீச்சில் நாசமாகிவிட்டன.

நேற்றுகாலை பதினொரு மணியளவில் இரண்டு மாச்செற்றி குண்டு வீச்சு விமானங்கள் நல்லூரில் அமைந்துள்ள மாநகரசபை அலுவலகம் குண்டு வீசி அழிக்கப்பட்டது. இவ் வழிப்பால் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றக் குழுவில் இருந்து மு. கா, ம. ஐ. மு. விலகல்

(கொழும்பு)

இலங்கை நிலைமை தொடர்பாக விளக்கிக் கூற, சபாநாயகர் தலைமையில் மாலைதீவுக்குச் சென்ற பாராளுமன்றக் குழுவில் முஸ்லிம் காங்கிரஸும், மக்கள் ஐக்கிய முன்னணியும் இறுதி நேரத்தில் ஒதுங்கிக் கொண்டன.

கிழக்கு மாகாணத்தில் முஸ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் பலி!

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் விமானக் குண்டு வீச்சுத் தாக்கத்தின் அதிர்ச்சியினால், வண்ணை மேற்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ஓய்வு பெற்ற அரசாங்க கணக்கியல் ஆடிட்டர் ஒருவர் மரணமானார்.

நேற்றுப் பிற்பகல் 3. 10 மணியளவில் இச் சம்பவம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதாகும் தமிழ் இளைஞர் பற்றித் தகவல் இல்லை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரால் கைது செய்யப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகரப்பகுதியில் வைத்து பெண்கள் உட்பட பலர் கைது செய்யப்படுகின்றனர்.

கைதாகும் மக்களை விடுவிக்கக் கோரி செல்லும் உறவினர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குள் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இராணுவ வீரரொருவர் கொல்லப்பட்டார். (ம)

## கிழக்கில் தமிழ் ஊர்காவல்படை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஊர்காவல் படையினரை அமைக்க உள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

இந்த ஊர்காவல் படை தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள தமிழ் குழுக்களின் சிபார்சின்அடிப்படையிலேயே (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஒரே குடும்பத்தில் ஆறு பேர் வெட்டிக் கொலை

(திருமலை)

திருமலையிலுள்ள பச்சனூல் என்னுமிடத்தை கடந்த வெள்ளியன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துப் மூன்று பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய பின் அவர்களுட்பட பதினொரு பேரை கோரமாக வெட்டியும், சுட்டும் கொன்றுள்ளனர். இவர்களில் ஒரே (4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தமிழர்களை வெளியேறப் பணிப்பு

(அம்பாறை)

அம்பாறையிலுள்ள பல தமிழ்க் கிராமங்களில் இருந்து தமிழ் மக்களை அப்பகுதிகளை விட்டு வெளியேறும் படி சிறிலங்கா இராணுவம் பணித்துள்ளது.

பாலையடி வெட்டை, கோலாவில், ஆலயடி வேம்பு, பனங்காடு, அக்கரைப்பற்று, 8 ஆம் குறிச்சி ஆகிய பகுதிகளை விட்டு தமிழ்மக்களை வெளியேறும்படி கடந்த 13 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பணித்துள்ளனர். (ம)

## 'முஸ்லிம்மக்களுக்கு வேண்டுகோள்'

தமிழீழத்தில் இன்று சிங்கள அரசு பெருமளவில் இனப்படுகொலையை நடத்துகின்றது.

தமிழீழமெங்கும்தொடர்ந்து ஆகாய விமானங்கள் குண்டுகள் வீசுகின்றன.

அகதிகள் முகாம்கள் பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள், மின்சார நிலையங்கள், பொதுமக்களின் வீடுகள் என எங்கும் குண்டுகள் வீசப்படுகின்றன.

எங்கும் உணவு இல்லை, மின்சாரம் இல்லை, எரிபொருள் இல்லை, மருந்துகள் இல்லை,

எந்த மாவட்ட வைத்தியசாலைகளும் இயங்க வில்லை.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும், வடக்குமாகாணத்திலும் கிளிநொச்சியிலும் பல மக்கள் பட்டினியால் இறந்துள்ளனர்.

தமிழீழமெங்கும் மருத்துவ வசதியின்றி இறந்தவர் பலர்.

சிங்கள அரசு திட்டமிட்டு தமிழீழ மக்களை பட்டினி போட்டு அழிக்க, அடிபணிய வைக்க முயல்கின்றது.

இங்கு வயல் நிலங்கள் எல்லாம் எரிக்கப்பட்டுள்ளன; சொத்துக்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. வீடுகளிலிருக்கும் நெல்லு, அரிசி எல்லாம் எரிக்கப்படுகின்றன. அல்லது சிங்கள இராணுவம் எடுத்துச்சென்று சிங்கள மக்களுக்குத் தருகின்றது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் தடுமாற்றம் வீட்டில் அல்லோலம்

(அலுவலக நிருபர்)

முத்திரைச்சந்தியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலால் கொல்லப்பட்ட நபர் அணிந்திருந்த உடைகளைப் பார்த்ததும் இளைஞர் ஒருவர் தனது தந்தைதான் இறந்துவிட்டார் என்று அலறியபடி வீட்டுக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## முஸ்லிம் மக்களுக்கு....

சர்வதேச அமைப்புக்குழு ஊடாக தமிழீழ மக்களுக்கு உதவுவது போல் அரசு நடிக்கின்றது.

உதாரணமாக யாழ். குடாநாட்டுக்கு மாதம் ஒன்றிற்கு 20,000 மெற்.தொன் உணவுப் பொருட்கள் தேவை.

யூன்14ஆம்திகதியில் இருந்து இன்று வரை குடாநாட்டுக்கு வந்த உணவுப்பொருட்கள் 1173 மெற். தொன்கள் மட்டுமே.

தமிழீழ மெங்கும் இனப்படுகொலையை நடத்திக் கொண்டு அதை மறைக்க கிழக்கில் தமிழ் முஸ்லிம் கலவரத்தை திட்டமிட்டு அரசு தூண்டி விடுகின்றது.

வடமாகாணத்தின் மீது அரசு நடத்தும் தாக்குதலை தடுத்து கிழக்கிற்கு மேலும் படைகளை அனுப்பவே முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் கொல்வதாக அரசு கூறுகிறது.

உண்மை நிலை என்னவெனில் தமிழீழமெங்கும் நடக்கும் இனப்படுகொலையை மறைக்கவும் விடுதலைப்புலிகளின் பெயரை களங்கப்படுத்தவுமே அரசு திட்டமிட்ட முஸ்லிம் மக்கள் தமிழ்மக்கள் கலவரத்தை தூண்டிவருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க. சிறிலங்கா சுதந்திரக்கட்சி EPRLF, PLOT, TELO ENDLF மற்றும் ஊர்காவல் படையை சேர்ந்த முஸ்லிம்கள் எல்லோரும் இப்போது ஒன்று சேர்ந்து தமிழ்மக்களை அழிக்கும் நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன.

முஸ்லிம் மக்களின் உரிமைகளை, நிலங்களை பறிக்கச் சிங்கள அரசு தயங்கியதில்லை. பல இடங்களில் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை பறிக்கவும் சிங்கள அரசு தயங்கியதில்லை.

தமிழீழப்பகுதிகளில் குறிப்பாக தமிழ்மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் பிரதேசங்களில் மட்டும் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவோ, கலாசார ரீதியாகவோ பாதிக்கப்படாமல் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் முஸ்லீம் மக்கள் முழுமையான பாதுகாப்போடு வாழக்கூடியதாக இருந்தது.

ஆனால் இன்று பல முஸ்லீம்கள் சிங்கள இராணுவத்தோடு சேர்ந்து தமிழ் மக்களை அழிக்கவும், தமிழீழப் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் முயற்சியிலும் இறங்கியிருக்கின்றார்கள்.

இந்திய இராணுவமும், அதன் கூலிப் படைகளும் முஸ்லிம்களை கொலை செய்த போது இவர்கள் யாருமே குரல் எழுப்பியது கிடையாது. சமூகக் கலவரம் நடந்தது கிடையாது.

ஐ.தே.க,சி.ல.சு.க ஆகியன இந்திய இராணுவத்திற்கு பயந்தும் முஸ்லிம் காங்கிரஸ் விசுவாசமாக இருந்தும் மௌனம் சாதித்தன.

இன்று அதே சக்திகள் தமது சுயநலன்களுக்காக சமூகக் கலவரத்தை தூண்டிவிட்டு முஸ்லிம் மக்கள் கொல்லப்படுகின்றார்கள் என முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்கள்.

முஸ்லிம் மக்கள் சிங்கள இராணுவத்தினால் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல வடக்கு மாகாணத்திலும் கொல்லப்படுகின்றார்கள்.

எமது போராட்டத்தின் மூலமே முஸ்ம்லிகள் தமது பிரதேசம்எனக்கூறிக்கொண்டு தமிழ் மக்களைக் கொன்று வரும் அம்பாறை மாவட்டத்தில் பெருமளவில் சிங் களக் குடியேற்றம் தடுக்கப்பட்டன.

அங்கு 50,000 சிங்கள குடும்பங்கள் குடியேற்றத் திட்டம் ஒன்று இருந்தது.

எமது போராட்டத்தின் மூலமே இன்று வழங்கப்பட்டிருக்கும் பல சலுகைகளையும் முஸ்லிம் மக்கள் பெற்றிருக்கிறார்கள்.

தமிழ் மொழி அரசகரும மொழி,இனவிகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு, பதவி உயர்வு என்பன.

தமிழீழப் போராட்டத்தோடு இணைந்து போராடிக் கொண்டு முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளைப் பேசுவதை விட்டு தமிழீழப் போராட்டத்தை காட்டிக் கொடுத்துக் கொண்டு சிங்கள அரசோடு கூட்டு சேர்வதன் மூலம் தமிழீழப் போராட்டத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் தனிமைப் படுத்தப்படுகின்றார்கள்.

நாளை சிங்கள அரசு உங்களை அழிக்கும் போது இன்றைய உங்கள் தலைமைகள் எப்படி தமிழீழப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததோ. அதேபோல உங்களையும் காட்டுக் கொடுக்கத் தயங்காது.

இன்று தமிழ் மக்களை கொலை செய்ய சிங்கள அரசு தரும் ஆயுதங்கள் நாளை உங்களையே அழிக்கத் தயங்காது.

இன்று தமிழ் மக்களை அழிக்கும் சிங்கள அரசு, அகதி முகாம்களை தாக்கும் சிங்கள அரசு முஸ்லிம் மக்களுக்கு தென் இலங்கையில் உணவும், உடையும் கொடுத்து பாதுகாக்கிறது. இது உங்கள் மீது உள்ள அன்பினால் அல்ல. நாளை தமிழர்களை அழித்த பின்பு உங்களின் அழிவு சுலபமானது என்பதாலேயே.

தமிழீழப் போராட்டத்தை அடக்க எனக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் எல்லாமே இன்று சிங்கள மக்களை கொலை செய்து ரயர்போட்டு எரிக்க பயன் படுகின்றன என்பதை முஸ்லிம் மக்கள் மறந்து விடக்கூடாது.

இன்று உலகில் நடுநிலையாக நின்று செய்திகளை வழங்கும் அமைப்புக்கள் கூட அரசு சார்பான செய்திகளை மட்டும் வெளியிட்டு வருகின்றன.

வெளிநாடுகளில் இருந்து உண்மைநிலையை கண்டறிய வருவோரும் கொழும்போடு திரும்பிச் செல்லும் நிலையே காண்கிறோம்.

கிழக்கு மாகாணத்தில் 14-06-90இல் இருந்து 5-8-90 வரை நடந்த சில தகவல்களை மட்டும் நாம் இங்கே தருகின்றோம். குறிப்பாக அம்பாறை மாவட்ட நிகழ்வுகளைத் தருகின்றோம்.

இச்செய்திகளை இலங்கைத் தீவில் வாழும் முஸ்லிம் மக்களினதும் உலகில் வாழும் முஸ்லிம் மக்களினதும் பார்வைக்கு வைக்கிறோம்.

தமிழீழத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் யார் உண்மையான நண்பர்கள் மன்பதை விரைவில் உணர்ந்து சரியான முடிவை எடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.

அவர்கள் சமூக விரோதிகளையும் காட்டிக்கொடுக்கும் தலைமைகளையும் கைவிட்டு எம்முடன் ஒன்றிணைந்து போராட முன்வரவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் 19.6.90இல் இருந்து 5.8 90 வரை 1679 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் 4420க்கு மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. 159க்கு மேற்பட்ட கடைகள் எரிக்கப்பட்டன. பலபெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இதேகாலகட்டத்தில் மட்டக்களப்பில் 779 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 1697 வீடுகள் எரிக்கப்பட்டன.

இச்செயல்களை எல்லாம் சிங்கள இராணுவத்தோடு சேர்ந்து எஸ். எல். எப். பி, யூ. என். பி, எம். சி. கட்சிகளைச் சேர்ந்த ஊர்காவல் படையினரான முஸ்லிம்களே செய்தார்கள். பல தமிழ்ப் பெண்கள் முஸ்லிம் சமூக விரோதிகளால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டார்கள்.

### பொத்துவில்

19.6.90 85 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. 16பேர்கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர்.

20.6.90 பொத்துவிலில் 1000 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன.

28.6.90 லடுகல காட்டில் அகதிகளாக இருந்த 25 இளைஞர்கள் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர்.

29.6.90 பொத்துவில் காவல்துறைநிலையம் (Police) திறக்கப்பட்டது. 30.6.90இல் இருந்து 25.7.90 வரை 75பேர் வரை கொலை செய்யப்பட்டனர்.

28.7.90 கோமாரி அகதிகள் முகாமில் இருந்து 18 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

01.8.90 பொத்துவில் அகதி முகாம் சுற்றிவளைக்கப்பட்டு 200பேர் கைது செய்யப்பட்டனர். அதில் 100பேர் சுடப்பட்டனர்.

2.8.90 பொத்துவிலில் மேலும் இருதமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### கோமாரி

20.6.90கோமாரியில் 15வீடுகளும் 2கடைகளும்கொள்ளை அடிக்கப்பட்டன. 3 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

### திருக்கோயில்

27.6.90 திருக்கோயிலில் 25 இளைஞர்கள் இரகசியமாக கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.

8.7.90 சாகாமப் பகுதியில் 15 வீடுகள் எரிக்கப்பட்டன.

9.7.90 கஞ்சிக்குடியாறு, தங்கவேலாயுதபுரத்தில் 150 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. 10 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 2000க்கு மேற்பட்ட ஆடுகள் மாடுகள் பிடித்துச் செல்லப்பட்டன.

2.8.90 15 பொதுமக்கள் சுடப்பட்டு இறந்தனர்.

### அக்கரைப்பற்று

24.06.90: 35 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

25 06.90: 16பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

26.6.90 ஆலையடி வேம்பில் வைத்து 5 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

28-6-9010: தமிழர்கள்கொல்லப் பட்டனர்.

03-7-90ல் இருந்து 20-7-90 வரை 103 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

1529 வீடுகள் சேதமாக்கப்பட்டன 123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டன20 கடைகளும், 2 மில்லும் எரிக்கப்பட்டன.

### நிந்தாவூர்

8-7-90: 89 தமிழர்கள் நிந்தாவூர் முருகன் ஆலயத்தில் வைத்து சுடப்பட்டு ஆலயத்துள் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

2-8-90 அட்டவவள்ளத்தில் 40 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். 5 பேர் சுடப்பட்டு கொல்லப்பட்டனர். வயலில் அருவி வெட்ட சென்ற 7 பேர் கொல்லப்பட்டனர்.

2-8-90 வரை காரைதீவு கிராமத்தில் 108 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### கல் முனை

14-6-90 - 20-6-90 வரை மல்வத்தை இராணுமுகாமில் இருந்து நடத்தப்பட்ட பீரங்கித்தாக்குதலில்85பொது மக்கள் கொல்லப்பட்டனர் 60 பேர் காயமடைந்தனர். கல்முனை 1ஆம் 2ஆம் குறுச்சியில் 65 வீடுகளும் பாண்டிருப்பில் 30 வீடுகளும் 35 அரசாங்கக்கட்டிடங்களும் சேதத்திற்குள்ளாகின.

21.6.90 நீலாவணையில் 25 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 14 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கல் முனை நகரில் 40 தமிழர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர்.

கல்முனை 1ஆம் 2ஆம் குறிச்சிகளில் 340 வீடுகள், பாண்டிருப்பில் 210 வீடுகள் நற்பிட்டி முனையில் 35 வீடுகள் சேனைக்குடியிருப்பில் 20 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

கல்முனைநகரில் 36 பலசரக்குக் கடைகளையும் 10 நகைக் கடைகளையும் கொள்ளையிட்டபின் சேதப்படுத்தினர்.

21.6.90 பாண்டிருப்பில் 80 தமிழர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கல்முனையில் உள்ள தமிழர்களின் கடைக்குள் போட்டு எரிக்கப்பட்டனர். இவர்களைத்தேடி இராணுவ முகாமுக்குச் சென்ற 60 பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

பாத்திமா நகர் அகதிமுகாமில் இருந்து கைது செய்யப்பட்ட 90 பொதுமக்கள் கல் முனை நகரில் எரிக்கப்பட்டனர்.

3.7.90 பாண்டிருப்பு மீண்டும் சுற்றிவளைக்கப்பட்டு பாண்டியூரன் உட்பட 65 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

28-7-90 மீண்டும் கல்முனையையும், பாண்டிருப்பையும் சுற்றிவளைத்து 35 பொது மக்களை சுட்டுக்கொன்றனர். இம் 35 பேரும் கல்முனை நகரில் கடை வைத்திருந்த தமிழர்கள் ஆவர்.

### சம்மாந்துறை

வீரமுனையில் கைது செய்யப்பட்ட 40 தமிழர்கள் சம்மாந்துறை காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள வீதிகளில் எரிக்கப்பட்டனர்.

21-6-90: 20 தமிழர்கள் சுடப்பட்டனர். பின் வீரமுனையில் கைது செய்யப்பட்ட 90 தமிழர்கள் சம்மாந்துறை சந்தியில் வைத்து எரிக்கப்பட்டனர். 60 வீடுகள எரிக்கப்பட்டன.

25 6 90 சம்மந்துறையில் 80 தமிழ் மக்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர்.

30 6 90 சவளக்கடையில் 6 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 25 வீடுகள் எரிக்கப்பட்டன.

1.7.90 சம்மாந்துறையில் 52 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 40 வீடுகள் எரிக்கப்பட்டன.

சொறிக்கல்முனையில் 25 வீடுகள் எரிக்கப்பட்டன. 3 பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

27.6.90 வீரமுனையில் 360 வீடுகள் எரிக்கப்பட்டன. 69 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

4ஆம் காலணி என்ற கிராமம் முற்றாக அழிக்கப்பட்டது 35தமிழர்கள் சுடப்பட்டனர். 280 வீடுகள் எரிக்கப்பட்டன.

மல்வத்தை, மல்லிகைத்தீவு வளத்தாப்பிட்டி போன்ற கிராமங்கள் முற்றாகஅழிக்கப்பட்டன. மல்வத்தையில் 170 வீடுகளும் மல்லிகைத்தீவில் 35 வீடுகளும் வளத்தாப்பிட்டியில் 115 வீடுகளும் கொள்ளை அடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

தலமைச் செயலகம்
வி. பு. ம. மு

---


விளம்பரங்கள்

### மீரா வெளியீடுகள்

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் 1989இல் 1990இல் வெளிவந்த தரமான நாவல்கள். 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கோவில் முன்புறம், யாழ்ப்பாணம், (R. 577)


---

### அச்சகம் சேதம்

யாழ். இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள பிறிமிய அச்சகம் விமானத் தாக்குதல்களால் பலத்த சேதமடைந்தது. திருடர்கள் இங்குள்ள பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர்.


## நெல் உயரக் குடி உயரும்

நெற்பயிரின் நிறைபயன் பெற்றிட உழும்பொழுதே
அடிப்பசளையாக நீமியா உரம் சேர்த்து உழவேண்டும்.
தழைச்சத்தின் நீடிய ஊட்டம் கிடைக்கிறது.



## நீமியா உரம்

ஒரு கிலோ விலை ரூபா 5-00 மட்டும்.
தொகையாக வாங்கினால் சகாய விலை.

மில்க்வைற் தொழிலகம்.

(B-1327)

# ஐ. நா. மன்ற மேற்பார்வையில் வளைகுடாவில் சர்வதேசப் படை

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எதிரான வர்த்தக தடைகளை அமுல்செய்ய ஐக்கிய நாடுகள் மேற்பார்வையில் சர்வதேச படை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் இது தொடர்பாக இங்கு சந்தித்துப் பேசினார்கள்.

அமெரிக்க வெளியுறவு துணைஅமைச்சர் றொபேர்ட் ஸிமித் சீனா, சோவியத் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் இது குறித்து பேச்சு நடாத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் இராணுவ குழு ஒன்றை இதற்காக நியமிப்பது என்பதுபற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

இக்குழு வளைகுடாவில் தரித்து நிற்கும் பல தேசங்களின் படைகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவுள்ளது.

சோவியத் ரஷ்யா இதற்காக ஆயிரம் பேர் கொண்ட படையை அனுப்ப முடிவு செய்துள்ளது என ''டாஸ்'' அறிவித்தது.

---

சிந்தனைக்கு

தீய சக்திகளுடன் சாத்வீக ஒத்துழையாமை என்றாலே ஆக்க சக்திகளுடன் ஒத்துழைப்பு என்றுதான் பொருள்

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## ஒரே தலைமையில்

காலத்துக்குக் காலம் தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறுகளே தமிழ் மக்களின் இன்றைய இன்னல்கள் யாவற்றுக்கும் காரணம். இதே தவறுகளை இனியும் செய்யமுடியாது.

சட்டசபையில் தமிழர் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஒற்றுமையாகச் செயல்படுத்த அன்றைய தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டு நிற்கவில்லை.

இதன் பின்னர் இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம் கொண்டுவருவதற்காக நியமிக்கப்பட்ட டொனமூர்கமிஷன் முன் ஜி. ஜி. பொன்னம்பலம் சமபலப் பிரதிநிதித்துவம் (ஐம்பதுக்கு ஐம்பது!) கோரி வாதாடியபோதும் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து நிற்கவில்லை.

இந்திய சுதந்திரப் போராட்டம் பழுத்துக் கனிந்த சமயத்தில் காயிதே ஆஜாத் முகம்மதலி ஜின்னா ''முஸ்லிம்களுக்குத் தனிநாடு வேண்டும், பாகிஸ்தானைப் பிரித்துக்கொடு'' என்று பிடிவாதமாக நின்றதால் பிரிட்டிஷார் அதைத் தட்டிக்கழிக்க முடியாது பிரித்துக் கொடுத்தனர்.

இலங்கையில் தமிழரும் முஸ்லிம்களும் பறங்கியரும் ஒற்றுமையாக இருந்தால்தான் விடுதலைபெற முடியும் என்பதை டி.எஸ். சேனநாயக்காவும் மற்றும் சிங்களத் தலைவர்களும் உணர்ந்து தமிழர்களின் ஒத்துழைப்பை நாடி நின்றனர்.

டி எஸ் சேனநாயக்கா தமிழ்த் தலைவர்களுக்கு வாக்குறுதிகள் கொடுத்தார். ஜி. ஜி. பொன்னம்பலம் லண்டன்சென்று திரும்புமுன்னர் பெரிய சேனநாயகாவின் வாக்குறுதிகளை நம்பி சுதந்திரக் கோரிக்கைக்கு தமிழ்த் தலைவர்கள் கைச்சாத்திட்டனர்.

சுதந்திரம் பெறும் சமயத்தில்கூடத் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காக ஒன்றாக நிற்கவில்லை.

இந்தியத் தோட்டத் தொழிலாளரான மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அமைச்சர் பதவியை செ. சுந்தரலிங்கம் தூக்கி எறிந்த சமயத்திலும் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடவில்லை.

இதன்பின்னர் ஜி ஜி. பொன்னம்பலம் டி. எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் அமைச்சராகச் சேர்ந்த பொழுது எஸ். ஜே. வி. செல்வநாயகம், வன்னியசிங்கம் தலைமையில் 'சமஷ்டி' ஆட்சி முறையே தமிழ் மக்கள் உரிமையுடன் வாழ வழிவகுக்கும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப் பட்டபோதும் தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்படவில்லை.

தலைமைப் போட்டியும் ''யார் அறிவாளி'' யார் பலசாலி?'' என்ற சுயநலப்போட்டியுமே தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் முனைப்பாக நின்றது.

சமஷ்டி ஆட்சிமுறைச்கு அன்றே ஒன்றுபட்டுக் குரல் எழுப்பிப் போராடியிருந்தால் இன்று தமிழ்மக்கள் பூரண சுயாட்சியுள்ள மாநிலத்தில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழக் கூடியதாக இருந்திருக்கும்.

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டத்தை ஒரேகுரலில் எதிர்த்துநின்ற தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்து ஒரே தலைமையில் ஒன்றாக நின்று போராடியிருந்தால் இன்றைய அவலநிலை ஏற்பட்டு இருக்காது.

அன்று தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள்ள ''கௌரவம்'' பற்றிப்பார்த்தார்கள். அதன் விளைவே இன்றைய நிலை.

இதே நிலை இனியும் தொடரக்கூடாது; தொடர முடியாது.

''ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு நாங்களே முன்மாதிரியாகச் செயல்படவேண்டும்'' என்ற நல்ல நோக்கத்துடன்'' ஈழப்புரட்சி அமைப்பு என்ற ஈரோஸ் இயக்கத்தைக் கலைத்துவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்ந்துகொள்ள முடிவு செய்துவிட்டதாக அதன் பொதுச்செயலாளராக இருந்த வே. பாலகுமாரன் அறிவித்திருக்கிறார்.

நல்ல முடிவு. தமிழ் மக்கள் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் முடிவு.

சொந்த மண்ணில் நிற்கமுடியாமல், மண்ணின் பிரச்சினைகளையும் நேரில் அறிந்து புரிந்து மக்களுடன் சேர்ந்து செயல்படமுடியாமல் கொழும்பிலும் டில்லியிலும் நின்று தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாகக் குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கும் குழுக்களும் கட்சிகளும் ''ஈரோஸ்'' காட்டிய வழியைப்பின்பற்றியாவது தங்கள் குழுக்களையும் கட்சிகளையும் கலைத்துவிட்டு விடுதலைப் புலிகளுடன் கலந்துகொள்வதே ஒரேவழி.

உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாது இருப்பதே மேல்.

---

100 கோடி அமெரிக்கடாலர் பெறுமதி

## அதி நவீன ஆயுதங்களை அமெ. எகிப்துக்கு அனுப்பும்

(வாஷிங்டன்)

நூறு கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான அதி நவீன எவ் 16 ரக ஜெற் யுத்த விமானங்களையும், நான்கு எதிர்ப்பு ஏவுகணைகளையும் எகிப்துக்கு அமெரிக்கா அனுப்பிவைக்கவுள்ளது என வாஷிங்டன்போஸ்ற் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்காக இரகசியமான அனுமதியை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் வழங்கியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான அமெரிக்காவின் புதிய சுற்று ஆயுத ஏற்றுமதியின் முதற்கட்ட நடவடிக்கை இது எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## சவூதிக்கு மேலும் படைகள்

(வாஷிங்டன்)

சவூதி அரேபியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படைகளுக்கு உதவியாக மேலும் எண்பதாயிரம் விசேட இராணுவ துருப்புக்களை அங்கு அனுப்பி வைக்க அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு ஆலோசித்து வருகிறது.

இதே சமயம் பங்களாதேஷும் சிறு படைப் பிரிவு ஒன்றை இங்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. சவூதியின் கோரிக்கையை தொடர்ந்து இது அனுப்பப்படுகிறது.

## அரச ஊழியர் அரசியலில் பங்கு

(வாஷிங்டன்)

அரசியலில் அரசாங்க ஊழியர்கள் பங்குபற்றலாம் என்று அமெரிக்க காங்கிரஸ் மன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்துக்கு ஆதரவாக முன்னூற்றி முப்பத்தி நான்கு வாக்குகளும் எதிராக எண்பத்தேழு வாக்குகளும் கிடைத்தன.

## விமானந்தாங்கி கப்பல்கள்

(வாஷிங்டன்)

ஜோன் எப் கெனடி என்ற விமானந்தாங்கி கப்பல் மத்திய தரைக்கடலுக்கு நேற்று முன்தினம் அனுப்பப்பட்டதாக அமெரிக்கா அறிவித்தது.

ஏற்கனவே மூன்று அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்கள் வளைகுடாவில் நிலைகொண்டுள்ளன.

## இந்தியஏவுகணை ஆகாஷ் சோதனை

(புதுடில்லி)

இந்திய விமான நாசகாரி ஏவுகணையான ஆகாஷ் கடந்த செவ்வாய்க்கிழமை பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

இருபத்தைந்து கிலோ மீற்றர்வீச்சுஎல்லையைக்கொண்ட இந்த ஏவுகணையின் அதிகளவு உற்பத்தி 1994இல் ஆரம்பிக்கப்படும்எனஇந்திய பிரதமரின் விஞ்ஞான ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

## காந்திக்கு சிலை

(நேற்றால்)

ஆபிரிக்கா நாட்டில் உள்ள பீட்டர் மாட்டின் பேர்க் நகரசபையில் மகாத்மா காந்திக்கான நினைவுச் சிலை ஒன்று அமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநகரத்திலேயே 1893ம் ஆண்டில் மகாத்மா காந்தி ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொழுதுவெள்ளையர்களால்பலாத்காரமாக தூக்கி எறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சவூதியில் இலங்கையர்

(றியாட்)

சவூதிஅரேபியாவில்நானூறு இலங்கைப் பிரஜைகள் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## அமெரிக்கா அனுமதி

(வாஷிங்டன்)

அமெரிக்க வர்த்தக செய்மதிகளை சோவியத் ரொக்கெட் இயக்கஉதவியுடன் அவுஸ்திரேலியா முகாமொன்றில் செயல்படுத்துவதற்கு அமெரிக்கா முதல் தடவையாக அனுமதி வழங்கியது என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## பணச் சுற்றோட்டம் குறைவால் பொருட்கள் வாங்குவதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகளில்போதியளவு பணம் இருப்பில் இல்லாமையினால் மக்களிடையே பணச் சுற்றோட்டம் குறைவாகவுள்ளது. இதனால் அகதிகளாக இல்லாத மக்களும்கூட பலர் பொருள்களை வாங்கப் பணமில்லாமல் திண்டாடுகின்றனர்.

வங்கிகளில் ஏற்பட்டுள்ள இப்பணத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக சகல வங்கிகளும் யாழ். அரசாங்க அதிபரின் உதவியுடன் கொழும்பிலிருந்துபணம் எடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

(ம)

## அகதிகளுக்குள் குடும்பச்சண்டை

(கரவெட்டி)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்குள் குடும்பச் சண்டை அடிக்கடி ஏற்பட்டு வருவதால் இக்கல்லூரி அயலில் உள்ளவர்களுக்கு பெரும் தொல்லைகள் ஏற்பட்டு வருகிறது.

## தாஜ் ஹோட்டல் முன்பாக வாகனம் கடத்தப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு தாஜ் ஹோட்டலுக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நிறுத்தப்பட்டிருந்த ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தினருக்கு சொந்தமான வாகனம் இனம் தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இந்த இயக்கத்தினர் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்தியபின்னர் தாஜ்ஹோட்டலுக்கு வந்திருந்தனர்.

ஹொட்டல் முன்பாக இந்த வஜிரா வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே சென்ற சில மணி நேரத்தால் வெளியே வந்து பார்த்தபோது அது காணாமல் போனது தெரிந்தது.

இச்சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கும், கொள்ளுப்பிட்டி பொலிஸுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போன வாகனம் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமானது.

## பத்திரிகைக்கு 'கியூ' வரிசை

குடாநாட்டுபத்திரிகைகளை வாங்க தீவுப்பகுதி மக்கள் 'கியூ' வரிசையில் நிற்கிறார்கள்.

ஈழநாதம், உதயன், முரசொலி இவற்றை ஒரேதடவையில் வாங்கவும் முடிவதில்லை.

ஒவ்வொரு பத்திரிகையும் வாங்க தனித்தனியாக 'கியூ' வில் நிற்கவேண்டும். ஒருவர் மேற்படி பத்திரிகைகளை வாங்க வேண்டுமானால் திரும்பத்திரும்பக் 'கியூ'வில் நின்றே வாங்க முடிகிறது.

கரையோரத் தாக்குதல்களால் தீவின் நடுமையத்திற்கு பொதுமக்கள் வந்து சேர்ந்துள்ளதால் புளியங்கூடல் சந்தி இப்பொழுது மக்கள் அதிக அளவில் கூடும் இடமாக மிளிர்கிறது.

புளியங்கூடல் சந்தியிலேயே பொதுமக்கள் பத்திரிகைகளை. வாங்க 'கியூ'வில் நிற்க வேண்டிய நிலைமை இருந்து வருகிறது. (21)

### இராணுவத்தை விசாரிக்க இராணுவ அதிகாரிகள்

# பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

(வவுனியா)

கைது செய்யப்படும் அப்பாவிப் பொதுமக்கள் மறைமுகமானமுறையில் அரசபடையினரால் கொலைசெய்யப்படுவது பற்றி உயர்மட்ட விசாரணைக்குழு ஒன்று இராணுவ அதிகாரிகளினால் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவஅதிகாரிகளினால் அமைக்கப்பட்டுள்ள மேற்படி விசாரணைக்குழுவில் இராணுவ அதிகாரிகளே அங்கம் வகிப்பார்கள்.

கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை, வவுனியா ஹொரவப்பொத்தான வீதி, 9 ஆம் கட்டை என்னும் காட்டு வீதி ஓரத்தில் கைதுசெய்யப்பட்ட தமிழ்மக்களில் 15பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போகும் பொதுமக்கள் பற்றிய விபரங்கள் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டதை அடுத்து இந்த உயர்மட்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட உயர்மட்ட விசாரணைக் குழுவிற்கு சாட்சித் தகவல்கள் வழங்குவதற்காக சட்டத்தரணி சொர்ணபாலாவும் வவுனியா இறம்பைக்குளம் தேவாலய பங்குத் தந்தை அருட்திரு சீ. எஸ். குரூஸ் அடிகளாரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (தி)

### ஹொரவப்பொத்தானையில் இராணுவத்தால்

## கொல்லப்பட்டோர் தொகை இருபதிற்கும் மேல்

(வவுனியா)

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதி 9 ஆம் கட்டை காட்டுவீதி ஓரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட சடலங்கள் காணப்படுவதாக பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்டுவந்த சிங்கள் மக்கள் வவுனியா குளவெளியில் அமைக்கப்பட்டுள்ள வியாபாரச் சந்தையில் வைத்து இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

பாதி எரிந்த நிலையிலும் பாதி எரியாத நிலையிலும் காணப்படும் இச்சடலங்களில் இரண்டு பெண்களுடையது என்றும், காணப்படும் சடலங்களுக்கருகில் இரண்டுசைக்கிள்களும் காணப்படுவதாகவும், இச்சடலங்களை காகங்கள் கொத்தித்தின்றுகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இடத்திலேயே கடந்த 9 ஆம் திகதி பதினைந்து தமிழ்மக்கள் இராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## தமிழருக்கு உதவிய சிங்களவர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் சில தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் தமிழர்களுடன் சேர்த்து சிங்களவர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்றும் கைது செய்யப்பட்ட சிங்களவரை இராணுவம் தமிழ்க் கைதிகளுடன் சுட்டு எரித்து விட்டதாகவும் இராணுவ மேலிடத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லொக்குப்புத்தா என்று அழைக்கப்படும் சிங்களவரே இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது உண்மைப் பெயர், வீரசேகரா என்றும், இவர் வெளிக்குளத்தைச் சேர்ந்தவர் என்றும் இராணுவத்தின் கடுமையான தாக்குதலின் போது பல தமிழ்ப் பொது மக்களைக் காப்பாற்றியவர் என்றும் கூறப்படுறது.

சில தினங்களுக்கு முன்னர் இவர் கைது செய்யப்பட்ட பின் இராணுவ முகாமை நோக்கிச் சென்ற இவரது உறவினர்களுக்கு மேற்படி நபரைக் காட்டவில்லை என்றும் இவர் இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது

இச்செய்தி பரவியதை அடுத்து சிங்கள மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது. வவுனியா எல்லைப்புறக் கிராமங்களில் தமிழ் மக்களுடன் ஐக்கியமாகப் பழகிவந்த சிங்களமக்கள் அரசபடையினரின் நடவடிக்கைக்கு அஞ்சி வீடுகளை விட்டு வெளிவருவதில்லை என்றும் கூறப்படுகிறது.

### பாராளுமன்றக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிம் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவில்லை என்பதால் இத் தூதுக் குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் இடம் பெறவில்லை என்று அதன் தலைலர் எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

### தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர்கள் மகாநாட்டிலேயே இந்தக் கொலைகள் குறித்து ஒப்புக் கொண்டுள்ளார்.

யாழ். குடாநாட்டிலிருந்து அனைவரையும் வெளியேற்றிவிட்டு புலிகளை முற்றாக அழிப்பதென்ற அரசின் திட்டம் கைவிடப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

### கதிர்காமக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லயத்துக்கருகேயுள்ள 'ஈஸ்வர' கோயிலினுள் சாத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராமகிருஷ்ண யாத்திரிகர் விடுதி முகப்பில் இருந்த ''ஓம் முருகா'' என்ற எழுத்துக்களும் நீக்கப்பட்டு வள்ளியம்மன் தேவாலயத்துக் கருகேயுள்ள 'ஈஸ்வர' கோயிலினுள் சாத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் இராமகிருஷ்ண விடுதி இப்போது அரும்பொருள் காட்சிச்சாலையாகவும் மாற்றப்பட்டுள்ளது.

இப்புனிதபூமி தற்பொழுது பெரும் குப்பைகூழங்களுடன் காணப்படுவதுடன் கதிர்காமம் எங்கும் நுளம்புகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது. (ம)

### கைதாகும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் சில தினங்களாக கைது செய்யப்படும் தமிழ் மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை எவராலும் அறிய முடியவில்லை.

இதே சமயம் வவுனியா சிங்களக் காட்டுப்பகுதிகளில் கரும்புகையுடன் கூடிய தீ எரிவதாகவும், கைது செய்யப்படும் தமிழ் மக்களில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டு தீ வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வவுனியா சந்தைப் பகுதிக்கு பூந்தோட்டம் குறுக்குப் பாதை வழியாக செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அதேவேளை இம்மாதம் ஆரம்பத்தில் வவுனியா கிராமங்களில் உள்ள அகதி முகாம்களின் மீது பொம்மர், மற்றும் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்களில் பலர், குடும்பம் குடும்பமாக மடுக்கோவில் பகுதியை நோக்கி கால் நடையாகச் செல்வதை அவதானிக்க முடிகிறது. (தி)

### திருமலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தைச் சேர்ந்த தாய் தந்தை, பிள்ளைகள் அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர் கொல்லப்பட்டோர் விபரம்! து. நடராஜா(40), ந. புஸ்பம் (35), ந. உதயா (10) ந. பத்மா (6), ந. நகுலன் (4), ந. விக்கினா (2) இ. மாணிக்கப்பா (60), வ. கிரேசி (35) வ. றொசானி (25), க. வீரப்பா (34) ம. கிருஸ்ணமூர்த்தி (கல்வித் திணைக்களஊழியர்)

### கிழக்கில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட உள்ளதாகவும், சிறிலங்கா இராணுவப் பாதுகாப்புடன் இவர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### வயோதிபர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெற்றது.

வண். வடமேற்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ஓட்டுமடத்தைச் சேர்ந்த பி. சண்முகநாதன் (74 வயது) என்பவரே மரணமானவராவார். இருதய வியாதியுள்ள இவ் வயோதிபர், வைத்தியசாலையில் தமது பிள்ளைகளுடன் உற்சாகமாக அளவளாவிக் கொண்டிருந்த சமயம், விமானக் குண்டு வீச்சின் அதிர்ச்சியால் - மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ் மாநகர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை அலுவலகத்தின் மத்தியில் வீழ்ந்த பாரிய குண்டு ஒன்றினால் மாநகர சபை கணக்காளரின் அலுவலகம் உட்பட எழுது வினைஞர்களின் மண்டபமும் பலத்த சேதம் அடைந்துள்ளது.

ஏற்கனவே மாநகரசபைக்கு சொந்தமான வாகனங்கள் குண்டு வீச்சில் அழிக்கப்பட்டிருந்தன. நேற்று இடம் பெற்ற குண்டு வீச்சை தொடர்ந்து அவை முற்றாக சேதமடைந்து விட்டன,

மேலும் சேதமடைந்தவை

மேலும் இந்த தாக்குதலின் போது யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியும் ஏற்கனவே திருத்த வேலைகளுக்காக கொள்வனவு செய்து வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான ''அஸ்பெஸ்ரஸ்'' தகடுகளும், கனரக டிப்பர் வாகனங்கள் இரண்டும் சேதமடைந்தன.

துர்ப்பாக்கியமான விடயம்

குண்டுவீச்சுத் தாக்குதலால் தொடர்ந்து யாழ். மாநகர சபை அலுவலகம் அழிந்து கொண்டிருப்பது எமக்குக் கிடைத்துள்ள ஒரு துர்ப்பாக்கியமான விடயமாகும் என மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் கவலை தெரிவித்துள்ளார். இந்த நாச வேலையை யாழ். அரசாங்க அதிபரூடாகக் கொழும்புக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் அவர் மிக விரைவில் இந்த கட்டிடத்திலும் பார்க்க ஒரு மாநகர சபை அலுவலகத்தை மிக விரைவில் எழுப்புவோம்என்ற நம்பிக்கை தமக்கு உண்டு எனவும் கூறினார்.

இறுதியாக மாநகரசபை அலுவலகம் தற்காலிகமாக யாழ். இந்து விடுதியில்இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். (லோ)

## அமைச்சர் விஜயம்

(கொழும்பு)

வளைகுடாநிலைமைகளால் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களைப்பற்றி அறிவதற்காக தொழில் அமைச்சர் ஜீ. என். பிரேமச்சந்திரன் யோர்தான், ஐக்கிய அரபு ராஜ்யம் ஆகிய நாடுகளுக்கு சென்றுள்ளார்.

### இளைஞனின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓட இதைக்கண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் அவர் பின்னே ஓடிச்சென்று ஒப்பாரி வைத்து அழுதனர். மரணவீட்டிற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப் பட்டன.

சிறிது நேரத்தில் இறந்தவரது உடல் சாக்கால் மூடிய நிலையில் வீட்டுக்குக்கொண்டு வரப்பட்டது. ஆனால் அது வேறொருவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டது எல்லோரும் கலைந்து சென்றனர். இளைஞரின் தந்தையார் சற்று நேரத்தின்பின் வீடு திரும்பினார். (மு)

## மோதிரம் உங்களுடையதா?

(யாழ்ப்பாணம்)

நேற்று முத்திரைச் சந்தியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலையடுத்து நிலத்தில் கிடந்த தங்க மோதிரம் ஒன்று ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எஸ். மணிவண்ணன் (இராசாவின் தோட்டம்), எம். விஜயசேகரன் (கோயில்வீதி) ஆகிய இரு இளைஞர்களும் இதனை கண்டெடுத்து ஒப்படைத்துள்ளனர்.

### யாழ்நகரில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டன.

விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியதும் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வந்திருந்த பக்தர்கள் தமது வீடுகளுக்கு வேகமாகஓட்டம் பிடித்தனர், முத்திரைச்சந்தைப் பகுதியில் நின்றவர்களும் பாதுகாப்புத் தேடி ஓடினர், அங்கு வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழிகளில் பெரும்பாலானவர்கள் பதுங்கிக் கொண்டனர். அப்பகுதிகளில் நின்ற வாகனங்கள் யாவும் அப்பகுதிகளைவிட்டு மறைவிடங்களுக்குச் சென்றன.

முத்திரைச் சந்தி பருத்தித்துறை வீதியிலுள்ள துணிக்கடை ஒன்றின் முன்னால் வீழ்ந்த றொக்கட் ஒன்றினால் அவ்விடத்தில் நின்ற கல்வியங்காடு ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த பரராசசிங்கம் சுதன் (19) என்பவர் கொல்லப்பட்டுள்ளதுடன் கந்தர்மடத்தைச் சேர்ந்த பாண்டியன் (22) முத்திரைச்சந்தியில் புரோமோட்டோஸ் இற்குப் பக்கத்து வீட்டிலிருந்த குமார்(26) இவரது மனைவி பிறேமினி (23), கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சற்குணராஜா (30) ஆகியோர் உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் நாவலர் வீதி செட்டித்தெருச் சந்தியில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சினால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. அதற்குப்பக்கத்தில் சற்றுத்தள்ளியுள்ள செல்லசிங்கம், ராசம்மா ஆகியோரது வீடுகளும் சிங்கம் மாவு அரைக்கும் மில் ஒன்றும் சேதமடைந்துள்ளன.

நல்லூர் குறுக்கு வீதியில் ரொக்கட் ஒன்று வீசப்பட்டதனால் மாவட்ட நீதிபதி க. கதிரவேற்பிள்ளையின் வீடு உட்பட 6 வீடுகள் சேதமடைந்தன. பொம்மர் விமானங்களின் குண்டு வீச்சுக்குத் துணையாக மீண்டும் வந்த ஹெலி சிறிது நேரம் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டது. விமானங்கள் தாக்குதல் நடத்திச் சென்ற பின்னர் பலாலியில் இருந்து மூன்று ஷெல்களும் ஏவப்பட்டன.

மாலை நேரக் குண்டு வீச்சு

இதன் பின்னர் மாலை 3. 30 மணியளவில் மீண்டும் வந்த இரண்டு பொம்மர் விமானங்கள் கஸ்தூரியார் வீதியிலுள்ள யாழ். இந்துக் கல்லூரிச் சந்தி ரவுண்டபோட் பகுதியில் மேற்கொண்ட தாக்குதலினால் ராசலிங்கம் கடையும், அதற்குப் பக்கத்திலிருந்த கடையும் சேதமடைந்துள்ளதுடன் கஸ்தூரியார் வீதியிலுள்ள நில அளவையாளரான கா. திருஞானசம்பந்தர் (52 வயது) என்பவர் இறந்துள்ளார், மேலும் அதே இடத்தைச் சேர்ந்த வரதராஜா (32 வயது) என்பவரும் படுகாயத்திற்குள்ளானார். (ம)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### கனகரெத்தினம் சதானந்தன்

ஆண்டவன் படைப்பு 21 - 08 - 1975

ஆழ்பவன் அழிப்பு 17 - 08 - 1986

சிங்களத்து இன வெறிக்கு
நீ ஆனாய் பலியாகி
இதை எண்ணும் வேளையினில்
நெஞ்சனைத்தும் வேகுதடா!
நாலாண்டு முடிந்தென்ன
நானூறு ஆண்டெனினும்
நீங்காது உன் நினைவு
நெஞ்சத்தை விட்டென்றும்; உனதாத்மா
சாந்தியுற வேண்டிநிற்கும்

புத்துவெட்டுவான்,
கிளிநொச்சி.

அம்மா, அப்பா, மாமா,
சகோதர சகோதரிகள்,
மருமக்கள், உறவினர்கள்

(B/1328)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.